ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2107/46 - 2019 ජනවාරි මස 25 වැනි සිකුරාදා - 2019.01.25
*2107/46 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: இ எம் டி எஸ்/எல் என் டி/05/ஏஸிகிவு/02/09.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2013/விஇ/619.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், எம்பிலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், தியப்பொடை கம் பத்து சிறு பிரிவில் ஆந்தொலுவை கிராமத்தில் அமைந்துள்ள அளவை அதிகாரியால் தயார் செய்யப்பட்ட இல. ஆர்/ஈஎம்பி/2018/181 இல் 2009.01.03 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்தில் காணப்பட்ட கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித் துண்டு :

**1. துண்டு இல. 899 - கரமெட்டியே யாய; விஸ்தீரணம் : 12.1497 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 889, 115, 473, 480, 475, 476, 477, 481, 500, 485 உம் 501; கிழக்கு : துண்டு இல. 500, 485, 501, 507, 510, 895, 512 உம் 513; தெற்கு : துண்டு இல. 510, 895, 512, 513 உம் 889; மேற்கு : துண்டு இல. 889.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு எம்பிலிபிட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும், விசாரணைகளின் போது காணி உறுதிப்பத்திரம் மற்றும் எழுத்து மூல ஆவணங்கள் என் முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனவும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரசங்க உதயகாந்த,
பிரதேச செயலாளர்,
எம்பிலிபிட்டிய.

பிரதேச செயலகம்,
எம்பிலிபிட்டிய,
2019, சனவரி 23.

2 - 379